සමාජ සවිබල ගැන්වීම් හා සුභසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
4th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/MF/05/01

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2015.11.30

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி சுற்றுநிருப இலக்கம் :- வா.எ.வ. 2015/03

சகல வா.எ.ச.அ.வங்கி/ வங்கிச் சங்க முகாமையாளர்கட்கும்

**<u>வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் ஆண்டு இறுதி நிதிக் கூற்று தயாரித்தல் - 2015</u>**

1. **அறிமுகம்:-**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் நிர்வாகத்தின் கீழ் செயற்படும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் ஆண்டு இறுதிக் கணக்கு முடித்தல் மற்றும் 2015ம் ஆண்டுக்கான நிதிக்கூற்று அறிக்கை தயாரித்தல் தொடர்பான வழிகாட்டல் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் என்பன இத்தால் வழங்கப்படுகின்றது. 2016ம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்று அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பான புதிய படிவம் அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நிதிக்கூற்று அறிக்கை சம்பந்தமாக வெயிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக இலங்கையின் வங்கியாளர் நிறுவனத்தின் ஊடாக அனைத்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கட்கும் பயிற்சியினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதுவரை இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள நெறிப்படுத்தல் ஆலோசனைக் கையேடுகளான 12லும் அதன் இணைப்புக்களிலும் மற்றும் 34லும் அதன் இணைப்புக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆண்டு இறுதிக் கணக்கு முடித்தல் மற்றும் நிதிக்கூற்று அறிக்கை தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக இத்தால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டியது வங்கிகள்/ வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கள் மற்றும் பணிக்குழுவினரின் கடமையாகும்.

2. **வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் அங்கத்தவர்களுக்கு பங்கு இலாபம் அல்லது பங்கு வட்டி வழங்குதல்.**

2.1 2015ம் ஆண்டினுள், 2014 அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளுக்கான நிதிக்கூற்று அறிக்கைகளுக்கு சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் அனுமதி கிடைக்கப்பெற்று 2015ம் ஆண்டினுள் வங்கி அங்கத்தவர்களின் பூர்த்தி செய்யப்பட்ட பங்குகளுக்கு பங்கிலாபம் வழங்கவுள்ள சமுதாய அடிப்படை வங்கிகள் 2015ம் ஆண்டுக்கு பங்குகளுக்கான வட்டி வழங்கவேண்டிய அவசியம் இல்லை.

2.2 2014ம் ஆண்டுக்கு முன்னரான ஆண்டுகளில் நிதிக்கூற்று அறிக்கை அனுமதிக்கப்பட்டு நெறிப்படுத்தல் ஆலோசனைகளின் பிரகாரம் பங்காளர்களுக்கு பங்கு இலாபம் வழங்கியதன் பின்னர் மீதப்படுத்தப்பட்டுள்ள பங்கு இலாப நிதியினை அடிப்படையாகக் கொண்டு 2015.01.01ம் திகதியில் பூர்த்தி செய்யப்பட்ட பங்குகளுக்கு பங்கு இலாபம் வழங்க முடியும். அச் சந்தர்ப்பத்தில் ஒரு பங்குக்கு குறைந்தது ரூபா 25.00 அல்லது அதற்கு கூடிய தொகையினை பங்கு இலாபமாக வழங்க வேண்டும்.

2.3 மேற்படி 2.1 மற்றும் 2.2களின் பிரகாரம் பங்கு இலாபத்தினை வழங்காத வங்கிகள் 2015ம் ஆண்டில் கட்டாயமாக 5% பங்கு வட்டியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம் / Director General / Tel:011-2873802/ 2872202 / Fax -011-2889002 / dg@divineguma.gov.lk

மேலதிக பணிப்பாளர்நாயகம் / Additional Director General / 011-2871672 / 011-2871672 / adg@divineguma.gov.lk

பணிப்பாளர் (நிர்வாகம்) / Director (Administration) / 011-2873799 / 011-2873996 / diradmin@divineguma.gov.lk

பிரதான கணக்காளர் / Chief Accountant / 011-2869742 / 011-2869742 / finance@divineguma.gov.lk

அலுவலகம் / Office / 011-2887280 / 011-2887722(Hotline)

3. **வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பணிக்குழுவினரின் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட சம்பளம், பிரயாணக் கொடுப்பனவு உள்ளிட்ட செலவீனங்களைச் சீர்செய்தல்.**

3.1 நெறிப்படுத்தல் ஆலோசனை 12இன் ஐந்தாவது பிற்சேர்க்கையில் குறிப்பிட்டதன் பிரகாரம் 2015ம் ஆண்டினுள் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள்/ வங்கிச் சங்கங்களின் நிரந்தர பணிக்குழுவின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பளம் மற்றும் பிரயாணக் கொடுப்பனவுகளின் உண்மையான செலவுகளை கணிப்பீடு செய்து அதனை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினக் கணக்கில் பற்று வைத்தல் வேண்டும்.

3.2 பணிக்குழுவினரின் சம்பளம் கணிப்பிடும் போது கீழ் வரும் விடயங்களில் தங்களது அவதானத்தை செலுத்தல் வேண்டும்.

3.2.1 வருடம் முழுவதும் யாராயினும் ஒரு உத்தியோகத்தர் வங்கி/ வங்கிச் சங்க பணிகளில் இணைத்துக் கொள்ளப்படாதிருப்பின், அவர் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கத்தில் கடமையினை மேற்கொண்ட காலத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்ட சம்பளத் தொகையினையே சம்பளச் செலவுக்குள் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.

3.2.2 சம்பளத்துடனான விடுமுறை அனுமதிக்கப் பெற்று விடுமுறையில் நின்ற உத்தியேகத்தர்களின் சம்பளம் சம்பளக் கணிப்பீட்டின் போது சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

3.2.3 பதிற்கடமை உத்தியேகத்தர் ஒருவர் சமுதாய அடிப்படை வங்கியில்/ வங்கிச் சங்கத்தில் இணைப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாதத்தின் கூடுதலான நாட்களில் அல்லது வருடத்தின் கூடுதலான மாதங்களில் அவர் வங்கி/ வங்கிச் சங்கத்தின் கடமைகளில் ஈடுபட்டிருந்தால் மாத்திரம் அவ் உத்தியோகத்தரின் சம்பளம் சம்பளக் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

3.3 பணிக்குழுவினரின் சம்பளம் கணிப்பீடு செய்யப்படும் போது EPF மற்றும் ETF நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் உத்தியோகத்தர்களின் மாதாந்த திரட்டிய சம்பளத்தில் அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படும் 12% EPF மற்றும் 3% ETF தொகையினைச் சேர்த்து ஒவ்வொரு மாதத்திற்குமான சம்பளத்தொகை கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் எந்தவொரு வங்கிக்கோ அல்லது வங்கிச் சங்கத்திற்கோ பணிக்குழுவினரின் சம்பளச் செலவீனங்களை உள்ளடக்காது வருடாந்த இலாப நட்டக்கணக்கினை தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

3.4 ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் உத்தியோகத்தர்களின் மாதாந்த திரட்டிய சம்பளமே சம்பளக் கணிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

3.5 பணிக்குழுவினரின் பிரயாணக் கொடுப்பனவு. ஆண்டுக்கான பிரயாணக் கொடுப்பனவினைக் கணிப்பிடும் போது ஒவ்வொரு உத்தியோகத்தரும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதேச செயலகத்திலிருந்து 2015ம் ஆண்டில் உண்மையாகப் பெற்றுக் கொண்ட பணத்தொகை மாத்திரம் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது வரை கோரப்படாத பிரயாணக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட வேண்டியதில்லை.

3.6 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள்/ வங்கிச் சங்கங்களின் நடவடிக்கைகளின் பொருட்டு பணிக்குழுச் சம்பளம் மற்றும் பிரயாணக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக பல்வேறு செலவீனங்களையும் மேற்கொள்கின்றது. இருப்பினும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின்

கொள்கைத் தீர்மானத்துக்கு அமைய வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு 2015ம் ஆண்டில் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் செலவுகளில் குறித்த கணக்காய்வு/ கண்காணிப்பு உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட பிரயாணக் கொடுப்பனவு மாத்திரம் வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களிடையே சம அளவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு வங்கி/ வங்கிச் சங்கங்களும் இவ்வாண்டுக்கு 1,466/= ரூபா தொகையினை கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு கட்டணக் கணக்கிற்கு பற்று வைத்தல் வேண்டும்.

அதற்கான பதிவுகள் வருமாறு:

பற்று – செலவுக் கணக்கு கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு கட்டணம்

(குறியீட்டு இல. 2136)

வரவு - வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட

செலவுகளுக்கான ஒதுக்கக் கணக்கு

(குறியீட்டு இல. 4033)

**4. கட்டாய சேமிப்பு மற்றும் வாழ்வின் எழுச்சி நலனுதவிக் கொடுப்பனவு நிதியங்களை கணக்கு வைத்தல்.**

4.1 வாழ்வின் எழுச்சி நலனுதவிக் கொடுப்பனவுகளை உரிய பயனுகரிகளின் கணக்குகளில் வரவு வைப்பதை துரிதப்படுத்தும் நோக்குடன் 2015ம் ஆண்டின் உரிய நலனுதவித் தொகை சமுதாய அடிப்படை வங்கிகளிள் வங்கிக் கணக்குகளுக்கு பிரதான காரியாலயத்திலிருந்து நேரடியாக வரவு வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.2 வாழ்வின் எழுச்சி நலனுதவித் தொகையில் கட்டாய சேமிப்புக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கில் மீதிகள் காணப்படும் வங்கிகள் மிக விரைவாக இம் மீதியினை உரிய பயனுகரிகளின் கணக்குகளில் வரவு வைத்தல் வேண்டும். தொடர்ச்சியாக இக் கணக்கில் மீதியினை செயற்படுத்திச் செல்வது 2015ம் ஆண்டுக்கு தயாரிக்கப்படும் நிதிக்கூற்று அறிக்கையின் உண்மைத்தன்மையைப் பாதிக்கும்.

4.3 வாழ்வின் எழுச்சி நலனுதவி நிதியத்தில் வாடிக்கையாளர்களின் வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய நிதியக் கணக்கில் அங்கத்தவர்களின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை காணப்படுமாயின் வங்கிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அத் தொகையினை கணக்குகளுக்கு வரவு வைத்தல் வேண்டும். அதே போல் 2015 டிசெம்பர் மாதத்திற்குரிய நலனுதவித் தொகை வங்கிக்கு கிடைத்தவுடன் அதனையும் தாமதிக்காது உடன் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

4.4 மேற்படி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக 2012 மார்ச் மாதத்திற்கு முன்னரான காலப்பகுதிக்குரிய பயனுகரிகளின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாமல் உள்ள நலனுதவித் தொகை, கட்டாய சேமிப்புத் தொகை என்பன காணப்படுமாயின் அதனையும்

மிக விரைவாக உரிய கணக்குகளுக்கு வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5. **கட்டாய சேமிப்பு முதலீட்டு நிதியத்திற்கான வட்டி வழங்கல்.**

5.1 2012 மார்ச் மாதம் வரை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளால் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு முதலீட்டுக்காக அனுப்பி வைத்த கட்டாய சேமிப்பு முதலீட்டு நிதியத்திற்கு உரிய வட்டித் தொகையினை வங்கிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவு துரிதமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

5.2 2015ம் ஆண்டிற்குரிய தனிநபர்களின் கட்டாய சேமிப்பு வைப்புகளுக்கான வட்டி வருடாந்தம் 5% ஆக கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு வரவு வைக்க/ ஒதுக்கி வைக்க வேண்டும். ஏனைய வைப்புக்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தில் மாற்றம் எதுவும் இல்லை என்பதுடன் அதனை செயற்படுத்துமாறும் வேண்டுகிறோம்.

6. **வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளல்.**

6.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் முகாமையாளரால் 2016 ஜனவரி 15ம் திகதிக்கு முன்னர் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதியங்களில் காலம் முதிர்வடையாமல் உள்ள 2015.12.31 முதலீடுகளின் மீதியினை உறுதிப்படுத்தி அதற்கான சான்றிதழைப் பெற்று முதலீடுகளின் உண்மைத் தன்மையினை உறுதி செய்து கொள்ளவும், அந்த மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழை பாதுகாப்பான விதத்தில் கோவை செய்து கொள்ளவும்.

6.2 சமுதாய அடிபடபடை வங்கிச் சங்கள்கள் தனது அதிகாரப் பிரதேசத்தினுள் இயங்கும் சமுதாய அடிப்படை வங்கிகளிடம் இருந்து வங்கிச் சங்கத்துக்கு முதலீட்டுக்காக அனுப்பிய நிதியங்களின் மீதியினை உறுதிப்படுத்தி மிக விரைவாக பெற்று அதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் நிதியங்களின் முதலீடு தொடர்பான உண்மைத் தன்மை உறுதிப்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும். அதே போல் அம் மீதிகளை உறுதிப்படுத்திய சான்றிதழ்களை பாதுகாப்பாக கோவை செய்து வைத்தல் வேண்டும். உரிய வங்கிகட்கும் முதலீட்டு உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்க வேண்டியது வங்கிச் சங்கங்களின் பொறுப்பாகும்.

7. **ஆண்டிறுதி நிதிக் கூற்று தயாரித்தல்.**

7.1 அனைத்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளும் மற்றும் வங்கிச் சங்கங்களும் 2015 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடும் அறிக்கைகளை தயாரித்துக் கொள்ள வேண்டும் (அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்களுக்கமைய)

7.1.1 2015.12.31 திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

7.1.2 2015.12.31 திகதிக்கான ஐந்தொகை

7.1.3 2015.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாயச்சல் கூற்று மற்றும் உரிமை மாற்றல் கூற்று

7.1.4 கணக்கீட்டுக் கொள்கைக் கூற்று.

7.2 பந்தி 7.1 இல் குறிப்பிட்டதன் பிரகாரம் நிதிக் கூற்று தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற குறிப்பேட்டில் தெளிவாக குறிப்புகள் பதியப்படல் வேண்டும்.

7.3 அத்துடன், தயாரிக்கப்பட்ட கூற்றுக்களை மாவட்ட உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவும். அன் நிதிக் கூற்று அறிக்கையுடன் 2015 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அபிப்பிராயத்தை விரைவாக வழங்குமாறு விடுக்கப்படுகின்ற கோரிக்கைக் கடித்தினையும் ஒப்படைக்கவும் அதன் பிரதியினை வங்கிப் பிரிவின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

**8. கடந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்று அறிக்கை தயாரித்தல், இடைக்காலக் கணக்காய்வு மற்றும் ஆண்டு இறுதிக் கணக்காய்வு.**

இது தொடர்பாக தனியான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

**9. மாதாந்தம் வங்கியின் முன்னேற்ற அறிக்கைகள் அனுப்புதல்.**

ய. வாழ்வின எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் 2015 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்கு முடித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் கணக்கு முடிப்பதற்கு முன்னரும் கணக்கு முடித்த பின்னருமான பரீட்சை மீதிகளை தயாரித்துக் கொள்ளவும். வழமை போல் முன்னேற்ற அறிக்கை, பரீட்சை மீதி (முன்னர்/பின்னர்) என்பவற்றை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய கணணியில் பதிந்து இறுவெட்டு (CD) அல்லது மின்னஞ்சல் மூலம் வங்கிச் சங்கத்திடம் விரைவாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**10. 2015 ஆம் வருடத்துக்கான ஆண்டிறுதிக் கணக்கு முடித்தல் மற்றும் நிதிக் கூற்று தயாரித்திலின் பொருட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் / வங்கிச் சங்கங்களில் வார இறுதி நாட்களின் கடமையினை மேற்கொள்ளுதல் மற்றும் நாட்சம்பளம் வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்குதல்.**

10.1 தங்போது விடுமுறை தினங்களில் கடமையினை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு மேலதிகமாக 2015 டிசம்பர் மாதம் 26 மற்றும் 27ம் திகதிகளான வார இறுதி நாட்களில் வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் வைப்புக் கணக்கட்கு வட்டி கணக்கிடுதல், அதனை பதிதல், கணக்குகட்கு வரவு வைக்கப்படவேண்டியுள்ள அல்லது தாமதமாகியுள்ள நலனுதவி தொகை / கட்டாய சேமிப்புத் தொகை போன்றவற்றை கணக்குகட்கு வரவு வைத்தல் அடங்கலான முழுமையான கணக்கு முடித்தல் நடவடிக்கைக்கு உரிய கடமைகளை மேற்கொள்ள முடியும்.

10.2 2016 ஜனவரி மாதம் 02,03ம் திகதிகளான வார இறுதி நாட்களில் வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் முன்னேற்ற அறிக்கை மற்றும் நிதிக் கூற்று அறிக்கை போன்றவற்றை தயாரிப்பதற்கு வங்கிகள் / வங்கிச் சங்கங்களை திறந்து பணிக்குழுவினர் கடமையினை மேற்கொள்ள முடியும்

10.3 இத் தினங்களில் கடமையினை மேற்கொள்கினற உத்தியோகத்தர்கட்கு சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தின் செலவில் நாட்சம்பளம் வழங்குவதற்கு அனுமதி உண்டு.

**11. தைப் பொங்கல் தின நிகழ்வு.**

இந்து மக்களால் பக்தியுடன் கொண்டாடப்படும் தைப் பொங்கல் விழா 2016 ஜனவரி 15 ஆம் திகதியாகும். இவ் விழாவின் பொருட்டு இந்து சம்பிரதாய மற்றும் சமய முறைப்படி கொண்டாடுவதுடன் அதனோடு இணைந்ததாக சேமிப்பு மேம்பாட்டு

வேலைத்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனையும் வழங்கவும்.

12. **2016 புதுவருடத்துக்கான வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.**

12.1 2016 புதுவருடத்தின் முதலாவது கடமை நாள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியாதலால் அத்தினத்தில் கொடுக்கல் வாங்கலின் பொருட்டு வாடிக்கையாளர்களை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிக்கு வருமாறு அன்பான அழைப்பை விடுக்கவும்.

12.2 அத்தினம் சிங்கள சம்பிரதாயங்களின் பிரகாரம் தேசிய இனிப்புப் பண்டங்கள் சிலவற்றுடன் தேனீர் உபசாரம் ஒன்றினை வங்கியின் செலவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். இவ் உபசாரம் வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள், கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் பிரிவில் கடமையாற்றும் கள உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு அன்பாக பரிமாறுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். இதற்காக கூடியது 5,000/= ரூபாவுக்குள்ளான செலவினத்தினை மேற்கொள்வதுடன், இதனை செலவுக் கணக்கு உபசாரச் செலவில் கணக்கு வைப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

13. **2016 புது வருட வாழ்த்துக்களில் இணைத்து கொள்ளல்.**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் இச் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு, வாழ்வின் எழுச்சிப் பயனுகரிகள் அடங்கலான குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தி அவர்கட்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு 2015 ஆம் ஆண்டில் அர்ப்பணிப்பணிப்புடன் செயற்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்கள் உட்பட அனைத்து பணிக்குழுவினருக்கும், சமுதாய அடிப்படை கட்டமைப்பின் சமுதாயத் தலைவாகள் உட்பட எங்களுடன் கைகோர்த்துச் செயற்பட்டு ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் பாராட்டுவதுடன், மலரவிருக்கும் 2016 ஆம் ஆண்டு சகலருக்கும் மங்களகரமான ஆண்டாக மலரவேண்டும் என எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தம்மிக்க குணவர்த்தன
பணிப்பாளர் நாயகம்

D.A சுனந்தா பியசீலி
பணிப்பாளர் ( குறுநிதி )

பிரதிகள் :-

1. சகல மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்கட்கும் - தகவலுக்காக
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் – வாழ்வின் எழுச்சித் அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காக